**2019 – மக்களவை பொதுத் தேர்தல்:**
**வாழும் காலத்துக்கு மதிப்பளிக்க வேண்டுகோள்....**

**☆ அரசியல் அமைப்புச் சட்டத்தின் மாண்புகளையும் நாட்டின் பன்முகத்தன்மையையும் பாதுகாத்து அனைவரையும் சமநிலையில் உள்ளடக்கிய சமூகத்தைப் பேண வாக்களிப்பீர்.**

**☆ தற்கொலைக்கு நிகரான பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைத் தடுப்பீர்...**

**☆ பகுத்தறிவு மிக்க, அறிவியல் மனப்பாங்கு நிறைந்த தமிழ் நாடு தொடர்ந்து தனித்தன்மையுடன் திகழ வாக்களிப்பீர்...**

-----------------------------

நண்பர்களே..!

வரும் சில நாட்களில் நமது 17 வது மக்களவையைத் தேர்வு செய்ய இருக்கிறோம். இந்தியாவின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் மிக முக்கியக் கடமையை ஆற்ற இருக்கிறோம்.

- பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்களிலும் உயர் கல்வி நிலையங்களிலும் அறிவுத் தளத்திலும் துணைவேந்தர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளை வகித்து நீண்ட நெடிய அனுபவம் மிக்கவர்கள் நாங்கள். இந்த நிறுவனங்களில் தான் எந்தவித அச்சமும் இன்றிச் சுதந்திரமாகப் பல்வேறு விதமான வளமையான சிந்தனைகளும் சித்தாந்தங்களும் கருக்கொண்டன. ஆனால் இதற்கு நேர்மாறாக அச்சம் குடிகொண்டுள்ள இடங்களாக இவை இப்போது உருமாற்றம் அடைந்து வருகின்றன. இதன் விளைவாகக் கேள்வி கேட்கும் மனப்பாங்கும் எதையும் விமர்சனப் பூர்வமாக அணுகும் ஆய்வுமுறையும் ஊக்கம் இழந்து வருகின்றன....

- கல்விப் புலத்தில் சுதந்திரமான செயல்பாடுகளுக்குப் புகழ் பெற்ற ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகம் முதலாக நிறுவனக் கொலையாகக் கருதப்படும் ரோகி

வெமுலா ஆராய்ச்சி மேற்கொண்ட ஐதராபாத் மத்தியப் பல்கலைக்கழகம் வரை நாட்டின் பல்வேறு மத்தியப் பல்கலைக்கழகங்களின் கல்விசார் செயல்பாடுகளும் கடமைகளும் தடுக்கப்படுகின்றன.

- இந்திய நாட்டின் பன்முகத்தன்மை மற்றும் மதச்சார்பின்மை ஆகிய மாண்புகளை அழிக்க, அனுமதிக்க முடியாத உளவியல் அச்சுறுத்தல் முதல் உடலியல் ரீதியான அச்சுறுத்தல்கள் வரை பல்வேறு அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. டெல்லி, இராஜஸ்தான், சண்டிகர், ஜடவ்பூர், அலகாபாத், பனாரஸ் இந்து பல்கலைக்கழகம், அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகம் உள்ளிட்ட பல்வேறு மத்தியப் பல்கலைக்கழகங்களில் தேசியம் என்ற பெயரில் மதச் சிறுபான்மையினர் தலித்துகள் மற்றும் பெண்கள் மீது வன்கொடுமைகள் நடந்தேறி வருகின்றன. நடுநிலையாளர்கள் வருந்தத்தக்க வகையில் மத்தியில் ஆட்சி செய்யும் ஆளும் கட்சியினர் ஆதரவின் பெயரிலும் தூண்டுதலின் பெயரிலும் இவை நிகழ்த்தப்படுகின்றன. இந்த வன்கொடுமையாளர்களை ஆட்சியாளர்கள் ஊக்கப்படுத்துகின்றனர் பாதுகாக்கின்றனர் எனும் நிலை கவலை தருகிறது.

- மேற்கண்ட வன்கொடுமைகள் வெளிப்படையாக நிகழ்த்தப்படும் அதே நேரத்தில் பல்வேறு உயர் ஆராய்ச்சி நிறுவனங்களின் அடிப்படைத் தன்மையையே மாற்றும் வகையில் தகுதி குறைந்தவர்களைத் தலைவர்களாக நியமித்தல், மூடநம்பிக்கை மலிந்தோருக்குப் பதவி உயர்வு வழங்குதல், அறிவு வளர்ச்சிக்கு நிதியைக் குறைத்தல் போன்ற மறைமுகமான செயல்களிலும் மத்திய அரசு ஈடுபட்டு வருகிறது.

- ஆர்.எஸ்.எஸுக்கு நேசமான திட்டங்களை அறிமுகம் செய்யவும் தங்கள்

சித்தாந்தத்திற்கு இசைவானவற்றை உண்மை போன்று காட்டவும் NCERT புத்தகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதுவன்றி விவசாயிகள் உழவர்கள் மற்றும் சாதிய வர்க்க உறவுகளை அறியத் தக்க வகையில் இருந்த ஒன்பதாம் வகுப்பு வரலாற்று பாடப் பகுதிகள் நீக்கப்பட்டதைக் குறிப்பிடலாம். உயர் கல்வித் துறையில் ஆர்.எஸ்.எஸ் உடன் நெருக்கமான தொடர்புடையவர் ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக நியமிக்கப்பட்டதை முதன்மை உதாரணமாகக் குறிப்பிடலாம். இவரது கல்வி விரோதச் செயல்களை எதிர்த்து அப்பல்கலைக்கழகத்தின் 93 விழுக்காடு ஆசிரியர்கள் போராடி வருகின்றனர்.

- மூடநம்பிக்கை , பகுத்தறிவு இன்மை, அதிதீவிர வகுப்புவாதம் ஆகியவை முடுக்கி விடப்பட்டு உயர் கல்வி பலவீனப்படுத்தப்படுகிறது. இதேபோல் இந்த ஆட்சியின் கொள்கைகளான அதிதீவிரத் தனியார்மயம் மத்தியத்துவப்படுத்துதல் மற்றும் கல்வியைக் கார்பரேட் மயமாக்கும் பணியும் நடந்தேறி வருகின்றன. இந்த அரசு தயாரித்து வந்த புதிய கல்விக் கொள்கை இந்திய உயர் கல்வி ஆணைய மசோதா ஆகிய இரண்டும் பரந்த அளவிலான எதிர்ப்பை எதிர்கொண்டன.

- இந்தியாவை வல்லரசாக மாற்றப் பெரும் சாதனைகளைச் செய்திருப்பதாகக் கூறிக் கொண்டாலும் 0.6 விழுக்காட்டிற்கு மேல் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு நிதியொதுக்கீடு செய்யவில்லை. தரமான ஆராய்ச்சியில் ஈடுபட்டு வரும் மூத்த ஆராய்ச்சியாளர்களுக்கும் முனைவர் பட்ட ஆய்வு மாணவர்களுக்கும் சிறிதளவே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சமூக அறிவியல் ஆய்வுகளுக்கு மட்டுமல்லாது இயற்கை அறிவியல் உள்ளிட்ட அனைத்து ஆய்வுகளுக்கும் இதே நிலைதான்...

- ❖ தற்போதைய மத்திய அரசால் நியமிக்கப்பட்டவர்களில் ஒருவரான ICSSR என்று சுருக்கமாக அழைக்கப்படும் இந்தியச் சமூக அறிவியல் கழகத்தின் தலைவர், இந்திய அரசின் தவறான கொள்கைகளை விமர்சனப் பூர்வமாக அணுகும் நோபல் பரிசு பெற்ற அமர்த்தியா சென் போன்ற தலைசிறந்த அறிவு ஜீவிகளை நிதி அமைச்சர் போன்று குற்றம் சாட்டுகிறார். சுதந்திர இந்தியாவின் எந்த அரசும் செய்யத் துணியாத வகையில் புள்ளிவிவரங்களை வெளியிட மறுத்தது தற்போதைய மத்திய அரசு. இதனைக் கண்டித்து உலகின் தலைசிறந்த பொருளாதார அறிஞர்கள் 108 பேர் ஓர் திறந்த மடலை இந்தியாவுக்கு எழுதியுள்ளனர். இவர்களைப் போலி பொருளாதாரத் துறை நிபுணர்கள் என்று இவர் விமர்சிக்கிறார்.

- ❖ கல்விப் புலம் மட்டுமல்லாது 90 விழுக்காடு மக்களின் வாழ்வாதாரமாகவும் தேசிய வருமானத்தில் 40 விழுக்காடாகவும் இருந்து வரும் முறைசாராத் தொழில்கள் இந்த அரசின் பொருளாதாரக் கொள்கைகளால் பெரும் அழிவைச் சந்தித்து வருகின்றன. கொடூரமான முறையில் நடைமுறை படுத்தப்பட்ட பண மதிப்பு நீக்கம் அரைகுறையாகவும் அவசர அவசரமாகவும் அறிமுகம் செய்யப்பட்ட ஜிஎஸ்டி ஆகியவை பேரழிவை ஏற்படுத்தியுள்ளன.
- ❖ இவ்விரண்டும் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதத்தை மட்டும் குறைக்கவில்லை. மாறாக, கடந்த எழுபது ஆண்டுகால வரலாற்றில் இல்லாத வகையில் வேலையின்மை வளர்ச்சி விகிதம் 6 விழுக்காட்டிற்கு மேல் அதிகரிக்கக் காரணமாகவும் அமைந்தன. வேலைவாய்ப்பு சார்ந்த முறைசாராத் தொழில்களை அழிக்கவும் காரணமாக அமைந்தன. மத்திய அரசு வெளியிட மறுத்து வெளிவந்த புள்ளி விவரங்களும் இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையத்தின் (CMIE) சமீபத்திய புள்ளி விவரங்களும் எப்போதும்

இல்லாத அளவுக்கு வேலையின்மை அதிகரித்து இருப்பதற்கு சான்றுகளாகும்.

- பண மதிப்பு நீக்கத்தால் நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் மரணம் அடைந்தனர். ஆனால் ஒரு சல்லிக் காசைக் கூடக் கறுப்புப் பணம் என்று மீட்டெடுக்க முடியவில்லை. வேளாண்மை நெருக்கடிகளைத் தீர்க்கக் கோரியும் விவசாயிகள் தற்கொலைகளைத் தடுத்திடக் கோரியும் நீதி கேட்டு விவசாயிகள் இலட்சக்கணக்கில் நெடும் பயணம் மேற்கொண்டனர். இவ்வரசு அவர்களுக்கு நீதி வழங்கவில்லை. மாறாக, கிராமப் புறங்களில் வேளாண்மை நெருக்கடி அதிகரித்துள்ளது. வேளாண் விளைபொருளின் விலை வீழ்ச்சியைச் சந்தித்து உள்ளது.
- கடந்த சில ஆண்டுகளாக ஆட்சியாளர்கள் இந்திய அரசியல் சாசனத்தின் நிறுவனங்களான உச்ச நீதிமன்றம் முதல் இந்திய ரிசர்வ் வங்கி வரை சிதைக்கும் வேலையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்திய தேர்தல் ஆணையம் கூட இதிலிருந்து தப்பவில்லை. இதனை எதிர்த்து கேள்வி கேட்போரின் குரல்வளையை ஒடுக்க, காலனி ஆட்சிக் காலத்தின் தேச துரோக சட்டத்தை மத்திய ஆட்சியாளர்கள் ஏவி வருகின்றனர். அனைத்துத் துறைகளிலும் இத்தகைய கடுமையான சூழல் நிலவிய போதிலும் நம்பிக்கை இழந்திடாமல், விவசாயிகள் போராட்டம் மத்திய மாநில அரசு ஊழியர்கள் தொழிலாளர்கள் போராட்டங்கள் பெண்கள் தலித்துகள் பழங்குடி மக்கள் மதச் சிறுபான்மையினர் போராட்டங்கள் ஆகியவை ஆட்சியாளர்களின் ஆதரவு பெற்ற குண்டர்களின் தாக்குதல்களையும் எதிர்கொண்டு தொடர்கின்றன. இவ்வாறான போராட்டங்கள், அனைத்து விதமான தாக்குதல்களில் இருந்தும் இந்திய மக்கள் மீண்டெழுவார்கள் என்ற நம்பிக்கையை விதைக்கின்றன. ஆனால் இத்தோடு நாம் திருப்தி அடைந்து விட முடியாது.

- ❖ சமூக அக்கறை உள்ள கல்வியாளர்கள் ஆகிய நாங்கள் இந்திய உழைப்பாளி மக்கள் செலுத்திய வரிப்பணத்தில் கல்வி கற்றவர்கள். இந்தியா ஒருமதச் சார்பற்ற நாடாகத் தொடர வேண்டும் என்று விரும்புகிறோம். இந்திய உயர் கல்வி முறை, அதற்கே உரிய அறிவியல் ஆய்வுமுறையிலும் விமர்சனப் பூர்வமான அணுகு முறையிலும் தொடர வேண்டும் என்று விரும்புகிறோம். இத்தகைய அமைப்பு முறையே தேச விரோதம் எனச் சித்தரிப்பவரை - இந்த அமைப்பு முறையின் மீதே அதிருப்தி தெரிவிப்பவர்களை - அதனை முடக்கிப்போடக் கேள்விக்கு உட்படுத்துவோரை நாங்கள் அனுமதியோம்.

- ❖ அதன் முதல் படியாக வரவிருக்கும் மக்களவைத் தேர்தல் முடிவுகள் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் விழுமியங்களை உயர்த்திப் பிடிக்கும் அரசாக அமைய உறுதி செய்ய வேண்டும். இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் முகப்புரையில் கூறப்பட்டுள்ள படி தன்னாட்சியுடைய மதசார்பற்ற சமூகச் சமத்துவமான ஜனநாயகக் குடியரசாகத் தொடர வேண்டும் என்று விரும்புகிறோம்.

- ❖ கடந்த பல வருடங்களாக வலிமை பெற்று, அணிதிரண்டுள்ள பிற்போக்கு சக்திகள் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை அழிக்கத் துடிக்கின்றன. இத்தகைய போக்குகளை ஜனநாயக முறையில் எதிர்கொண்டு, வருகிற தேர்தலில் முறியடித்து, வாழும் காலத்துக்கு மதிப்பளிக்க வேண்டுகிறோம்.

## கையொப்பமிட்டோர் பட்டியல்.

1. முனைவர்.எம்.அனந்த கிருஷ்ணன் முன்னாள் துணைவேந்தர் அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் முன்னாள் தலைவர் IIT கான்பூர்.
2. நீதியரசர். ஹரி பரந்தாமன் ஓய்வு.
3. திரு.எம்.ஜி. தேவசகாயம் IAS ஓய்வு.
4. முனைவர்.எஸ்.எஸ்.இராஜகோபாலன் கல்வியாளர்.
5. முனைவர்.வே.வசந்திதேவி முன்னாள் துணைவேந்தர், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்.

6. முனைவர்.ம.ராஜேந்திரன் முன்னாள் துணைவேந்தர் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம்.
7. முனைவர்.கே.ஏ.மணிக்குமார் முன்னாள் துணைவேந்தர் சுவாமி விவேகானந்தா பல்கலைக்கழகம் மத்திய பிரதேசம்.
8. திரு.ஆர்.பூர்ணலிங்கம் IAS ஓய்வு.
9. திரு.விஜயசங்கர் ஆசிரியர், ஃபிரண்ட் லைன்
10. முனைவர்.எஸ்.சாதிக் முன்னாள் துணைவேந்தர் சென்னைப் பல்கலைக்கழகம்.
11. முனைவர்.பொன்னவைக்கோ முன்னாள் துணைவேந்தர் பாரதிதாசன் பல்கலைக்கழகம் திருச்சி.
12. திரு.எஸ். தியோடர் பாஸ்கரன் எழுத்தாளர்.
13. திரு.பி.பி. பிரின்ஸ் கஜேந்திர பாபு கல்வியாளர் பொதுச் செயலாளர் பொதுப் பள்ளிக்கான மாநில மேடை.
14. முனைவர்.கே.நாகராஜன் பேராசிரியர் ஓய்வு எம்.ஐ.டி.எஸ் சென்னை.
15. முனைவர் ஆர்.இராமாணுஜம், பேராசிரியர் இந்திய கணிதவியல் கழகம் சென்னை.
16. முனைவர். இனக்சி பட்டாச்சார்யா பேராசிரியர் IIT சென்னை.
17. முனைவர். அயன் முக்கோபதாதாய் பேராசிரியர் IIT சென்னை.
18. முனைவர். சுரேஷ் கோவிந்தராஜன் பேராசிரியர் IIT சென்னை.
19. முனைவர். கே. ஜோதி சிவஞானம், பேராசிரியர், பொருளாதாரத் துறை, சென்னை பல்கலை கழகம்.
20. முனைவர். ஸ்ரீதர் பொருளாதார நிபுணர், ஃ பிரண்ட் லைன்.
21. முனைவர்.ஒய். சீனிவாச ராவ் பேராசிரியர் பாரதிதாசன் பல்கலைக்கழகம்.
22. முனைவர்.வி.பி.ஆத்ரேயா பொருளாதார நிபுணர். பேராசிரியர் ஓய்வு பாரதிதாசன் பல்கலைக்கழகம்.
23. முனைவர். ஆர். காளீஸ்வரன் பேராசிரியர், மாற்று ஊடக மையம் லையோலா கல்லூரி சென்னை.
24. மருத்துவர். வீ. ஜீவானந்தம் சூழலியல் செயல்பாட்டாளர்,
25. முனைவர். சி.எஸ். ரெக்ஸ்சர்குணம், மருத்துவர் மற்றும் தலைவர், தமிழ்நாடு சுகாதார முன்னேற்ற சங்கம்.
26. முனைவர்.ஆயிஷா.இரா. நடராசன் அறிவியல் எழுத்தாளர் மற்றும் கல்வியாளர்.
27. திரு.சுகி.ஜெயகரன் புவியியலாளர் மற்றும் எழுத்தாளர்.
28. முனைவர்.எஸ்.ஜனகராஜ் பேராசிரியர் ஓய்வு MIDS சென்னை.
29. முனைவர். டி.சந்திரகுரு பேராசிரியர் ஓய்வு மற்றும் முன்னாள் சின்டிகேட் உறுப்பினர்.
30. முனைவர்.எஸ்.கோச்சடை பேராசிரியர் ஓய்வு மற்றும் எழுத்தாளர்.
31. முனைவர்.ஜி.சி.மனோகரன் நூலகர் ஓய்வு மன்னர் கல்லூரி.
32. பேரா.எஸ்.மோகனா ஓய்வு பழனி ஆண்டவர் கல்லூரி பழனி.
33. முனைவர்.ஆர்.முரளி முன்னாள் முதல்வர், மதுரைக் கல்லூரி மதுரை.
34. முனைவர்.வி.நடராஜன் விஞ்ஞானி இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையம்.
35. பேரா. எஸ்.இராம சுப்பிரமணியன் எழுத்தாளர் பேராசிரியர் ஓய்வு அரசு கலைக் கல்லூரி திருவண்ணாமலை
36. முனைவர். கே. இராமகிருஷ்ணன் பேராசிரியர் ஓய்வு பாரதியார் பல்கலைக்கழகம்
37. முனைவர்.மு.இராமசாமி நாடகவியல் பேராசிரியர் ஓய்வு தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம்
38. முனைவர்.ஆர்.ருக்மணி விஞ்ஞானி ஓய்வு எம்.எஸ்.சாமிநாதன் ஆராய்ச்சி மையம் சென்னை.
39. முனைவர்.ஏ. சங்கரசுப்பிரமணியன் பேராசிரியர் ஓய்வு அரசு கலைக் கல்லூரி, சேலம்.
40. முனைவர்.எஸ்.சங்கரலிங்கம், பேராசிரியர், ஓய்வு மாநில துணைத் தலைவர் PUC.I
41. முனைவர்.வி. ஸ்ரீதர் விஞ்ஞானி ஓய்வு இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையம்.
42. முனைவர்.மு.திருமாள்வளவன் முன்னாள் முதல்வர் அரசு கலைக் கல்லூரி, வியாசர்பாடி, சென்னை.

43. முனைவர்.ஆர்.உஷா, பேராசிரியர் ஓய்வு மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.
44. பேரா. பி. விஜயகுமார் , ஓய்வு சரஸ்வதி நாராயணன் கல்லூரி, மதுரை.
45. பேரா.பிரபா, கல்வி மணி பேராசிரியர் ஓய்வு.
46. அ.மார்க்ஸ், பேராசிரியர் ஓய்வு மற்றும் எழுத்தாளர்
47. முனைவர்.ஆர்.சந்திரா, உறுமு தனலட்சுமி கல்லூரி திருச்சி.
48. பேரா.கே.ராஜீ பேராசிரியர், ஓய்வு மற்றும் ஆசிரியர் புதிய ஆசிரியன்.
49. முனைவர்.வி.பொன்ராஜ், முன்னாள் முதல்வர் எம்.டி.டி.இந்துக் கல்லூரி திருநெல்வேலி.
50. முனைவர்.ஏ.ஜேம்ஸ் வில்லியம்ஸ் பேராசிரியர் ஓய்வு மற்றும் முன்னாள் அகில இந்திய தலைவர் அகில இந்திய கல்லூரி மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் கூட்டமைப்பு.
51. முனைவர். ஐ.பி. கனகசுந்தரம், முன்னாள் முதல்வர், மாவட்ட கல்வி ஆராய்ச்சி மையம்.
52. முனைவர். பி. ரத்னசபாபதி, தமிழ் பேராசிரியர் (ஓய்வு), சென்னை.
53. முனைவர். பி. முருகையன், முதல்வர் (ஓய்வு), சிவந்தை கல்வியில் கல்லூரி, சென்னை.
54. முனைவர். எஸ். ஜெயசங்கர், முதல்வர் (ஓய்வு) ஸ்ரீ வாசவி கல்லூரி, ஈரோடு.
55. முனைவர். எஸ். ஹேமா,பேராசிரியர் (ஓய்வு), ஹோலிகிராஸ் கல்லூரி, திருச்சி.
56. முனைவர் வி.முருகன், பேராசிரியர் (ஓய்வு), விவேகானந்தா கல்லூரி, சென்னை.

**வேண்டுகோள் விடுத்தலை துவக்கிவைத்தவர்கள்:**

57. முனைவர்.எஸ்.கிருஷ்ணசாமி பேராசிரியர் ஓய்வு மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.
58. பேரா.பி. இராஜ மாணிக்கம், ஓய்வு சரஸ்வதி நாராயணன் கல்லூரி மதுரை.
59. முனைவர்.என்.மணி, பேராசிரியர் மற்றும் தலைவர் ஈரோடு கலைக் கல்லூரி ஈரோடு.
60. முனைவர். டி.ஆர். கோவிந்த ராஜன், பேராசிரியர் ஓய்வு இந்திய கணிதவியல் கழகம் சென்னை.